## ஜனாஸாவைக் குளிப்பாட்டுதல்

ஒருவருடைய ஜனாசாவை அடக்கம் செய்வதில் முதற்கட்டப் பணியானது மய்யித்திற்குக் குளிப்பாட்டுவதாகும், இது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், தவறுதலாக ஒரு ஜனாசாவைக் குளிப்பாட்டாமல் அடக்கம் செய்துவிட்டாலும் அதை மீண்டும் வெளியில் தோண்டியெடுத்து குளிப் பாட்டுவது இன்றியமையாததாகும். ஒருவர் தான் சவாரி செய்துகொண்டி ருந்த ஒட்டகத்தின் மீதிருந்து கீழே விழுந்து இறந்துவிட்டார். அப்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் "அவரைத் தீங்கனியின் இலைகளி டப்பட்ட தண்ணீரினால் குளிப்பாட்டி அவருடைய ஆடைகளையே அவ ருடைய கஃபனாகப் பயன்படுத்துங்கள்" (புக்ஹாரி,முஸ்லிம்). ஆண்கள் ஆண்களைக் குளிப்பாட்டவேண்டும், பெண்கள் பெண்களைக் குளிப்பாட்ட வேண்டும், பெண் இறந்துவிட்ட தன்னுடைய கணவரைக் குளிப்பாட்ட லாம். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் கூறுகிறார்கள், கடந்துவிட்ட காலம் திரும்பி வருவதானால் இறைத்தூதர் ﷺ அவர்களை அவர்களுடைய ﷺ மனைவிகளே குளிப்பாட்டியிருப்பார்கள். (அபூ தாவூத்). இதுபோன்றே, ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்கள் தான் இறந்துவிட்டால் அவர்களே குளிப் பாட்டவேண்டும் என்று தன் மனைவிக்கு அறிவுறுத்தியிருந்தார்கள். ஹஜ்ரத் அபூ மூசா அஷ்ஃஅரி (ர) அவர்கள் மற்றும் ஹஜ்ரத் ஜாபிர் (ர) அவர்கள் தங்களுடைய மனைவிகளைத் தாங்கள் இறந்தபின் அவர்களே குளிப்பாட்டவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்கள். இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், இதில் எந்தக் கருத்து வேறு பாடும் இல்லை. இதுபோன்றே, கணவரும் தன்னுடைய மனைவியின் ஜனாசாவைக் குளிப்பாட்டலாம். ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்களிடம் கூறியிருந்தார்கள், உங்களுடைய மரணம் எனக்கு முன்னால் ஏற்படுமேயானால் நானே உங்களைக் குளிப்பாட்டு வேன் மற்றும் கஃபன் அணிவிப்பேன் (இப்னு மாஜா). இவ்வகையில், இது அனுமதிக்கப்பட்டுள்ளதாக இருந்தாலும் இதில் கருத்துவேறுபாடு நிலவுகிறது. குளிப்பாட்டுவதற்காக ஒரு நம்பிக்கைக்குரியவரை மட்டுமே தேர்ந்தெடுக்கவேண்டும், அவர் நம்பிக்கைக்குரியவராகவும் அமானிதப் பண்புடையவராகவும் இருக்கவேண்டும், குளிப்பாட்டும் விதிகள் மற்றும் முறையினை நன்கறிந்தவராக இருக்கவேண்டும். இவ்வாறு அனுபவ முள்ள ஒருவர் இறந்தவருடைய உறவினர்களில் ஒருவராக இருப்பாரே யானால் இந்தப்பொறுப்பினை அவருக்கே ஒப்படைக்வேண்டும், அதுவே சிறந்ததாக இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், உங்கள் ஆண்களை அமானிதப் பண்புடையவர் மட்டுமே குளிப்பாட்டவேண்டும். குளிப்பாட்டுபவர் குளிப்பாட்டும்போது தன்னுடைய பார்வையைப் பாது காத்துக்கொண்டவராக அதனைச் செய்யவேண்டும். மரணித்தவர் என்றா

www.uzaifahi.com

லும் அவரை மூடி மறைத்து மூடப்படவேண்டிய பகுதியை மூடியே வைக்க வேண்டும், மரணித்தவருடைய உடலில் ஏதும் குறையோ அருவருக்கத்தக்க ஒன்றையோ கண்டால், அதனை மறைத்துவிடவேண்டும், இதுவே குளிப் பாட்டும் அந்த மனிதருடைய அமானிதப்பண்பாகும். எவர் ஒரு முஃமினு டைய குறையை மறைக்கின்றாரோ அல்லாஹ் தஆலா அவருடைய குறை களையும் மூடி மறைப்பான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

اذْكُرُوا مَحَاسِنَ مَوْتَاكُمْ، وَكُفُّوا عَنْ مَسَاوِئِهِمْ

பொருள்: உங்களில் இறந்துவிட்டவர்களுடைய நன்மைகளைப்பற்றியே கூறுங்கள், அவர்களுடைய குறைகளைப்பற்றியோ தீமைகளைப்பற்றியோ பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் (அபூதாவூத், திர்மிதி, ஹாகிம், பைஹஃகி)

www.uzairfalahi.com

**ஜனாஸாவைக் குளிப்பாட்டுவதற்குத் தேவையானவை**

1 இறந்தவர் முஸ்லிமாக இருக்கவேண்டும் (முஸ்லிமல்லாதவருக்குக் குளிப்பாட்டுவதில்லை).

2 இறந்தவருடைய உடலின் பெரும்பகுதி சிதையாமலிருக்க வேண்டும் (விபத்தின் காரணமாக உடல் குளிப்பாட்டுவதற்குத் தகுந்ததாக இல் லாதிருக்குமானால், வேறு வழியில்லாமலாகிவிடும்).

3 இறந்தவர் ஷஹீதானவராக இருக்கக்கூடாது, ஏனெனில், ஷஹீதான வருக்குக் குளிப்பாட்டுவதுமில்லை, அவருக்குக் கஃபன் அணிவிப் பதுமில்லை, அவருக்கு ஜனாசா தொழுகை நிறைவேற்றப்படுவது மில்லை. (சில மார்க்கச்சட்ட அறிஞர்களின் கருத்துப்படி) இறைத் தூதர் ﷺ அவர்கள் உஹது போரில் ஷஹீதானவர்களுக்கு ஜனாசா தொழுகையைத் தொழுதார்கள், ஆகவே, சில உலமாப்பெருமக்கள் அவர்களுக்கு ஜனாசா தொழுகை தொழப்படும் என்று கூறுகின்றனர்.

4 இறந்துவிட்ட நிலையில் பிறக்கும் குழந்தை அல்லது சற்று முன்பே பிறந்த குழந்தையாக இருப்பின் குளிப்பாட்டப்படும், கஃபனும் அணிவிக்கப்படும். குழந்தை பிறக்கும்போது அது உயிருடன் இருப் பதற்கான அறிகுறி ஏதும் இருந்திருக்குமானால் இவ்வாறு செய்ய வேண்டும் என்று சில உலமாக்கள் கூறுகின்றனர்.

## ஜனாஸாவைக் குளிப்பாட்டும் முறை

மரணித்தவரைக் குளிப்பாட்டுவதற்குத் தீங்கனியின் இலைகளிடப்பட்ட (பேரி மரம்) தண்ணீரைப் பயன்படுத்தவேண்டும். இன்றைய சூழ்நிலையில் தண்ணீருடன் சோப்பு பயன்படுத்துவது தவறில்லை. முதலில் உடலை ஒரு உயராமான இடத்திலோ ஒரு பலகையின் மேலோ வைக்கவேண்டும். நான்கு புறத்திலிருந்தும் திரையிட்டோ அல்லது ஒரு அறையிலோ வைத்து மர்ம இடத்தை மறைத்தவாறு ஆடைகளை அகற்றவேண்டும். அசுத்தம் ஏதும் இருப்பின் அதனை முதலில் சுத்தப்படுத்தவேண்டும். குளிப்பாட்டுபவர் தன்னுடைய கையில் துணியைச் சுற்றிக்கொண்டு உடலின் மர்மஸ்தானத்தைக் கழுவவேண்டும், அதன்பின் உதூ செய்விக்கும் வகையில் கொப்பளிக்கவும் மூக்கில் தண்ணீர் செலுத்தும் வகையிலும் தன்னுடைய விரலில் துணியைச் சுற்றிக்கொண்டு வாயிலும் மூக்கிலும் விட்டு சுத்தப்படுத்தவேண்டும். உதூ செய்வித்தபின் முதலில் தலையைக் கழுவவேண்டும், பின்பு தாடியை சுத்தப்படுத்தி, முதலில் உடலின் வலது புறத்தினையும் பின்பு இடது புறத்தினையும் குளிப்பாட்டவேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்யவேண்டும். பின்பு மூக்கிலும் மர்ம இடத்தின்மீதும் ஏதும் கசிந்து விடாமலிருக்கும் வகையில் பஞ்சை வைக்கவேண்டும்.

* * *

www.uzairfalahi.com